வாகை பதிப்பகம்

International Research Journal of Tamil Literary Studies

# GOD IN SANGAM LITERATURE

# சங்க இலக்கியத்தில் கடவுள்

**ஏஸ். காந்திதுரை [அ, *]**

**[அ] தமிழ்த்துறை, தியாகராஜர் கல்லூரி, மதுரை- 625009, தமிழ்நாடு, இந்தியா.**

**S. Gandhidurai [a, *]**

**[a] Department of Tamil, Thiagarajar College, Madurai-625009, Tamil Nadu, India**

**[*] Corresponding Author:** suruligandhithurai@gmail.com

**Received: 21-04-2021, Accepted: 25-04-2021**

***Abstract:*** In Sangam literature, theology was structured accurately and it was an important part of the lives of the Tamil people in that period. In Tamilian's custom, people were greatly devoted and faith towards the God. They prayed God to help them succeed in their attempts, to avoid harm and to have peaceful life in the present and after life. Worshiping of God began in the early days of the Sangam period. First they started worshipping of nature and it grows into an ancestral worship and then flourished to religious worship today. In this article we will see about how the deities were worshipped by the people of the Sangam period.

**Keywords:** *Sangam literature, theology, Sangam period, religious*

***ஆய்வுச்சாரம்:*** *சங்க இலக்கியத்தில் தமிழரின் வாழ்வியலில் கடவுட்கொள்கை மிகவும் முக்கியமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. திணைநிலைக் குடிகளான மக்கள் கடவுள் நம்பிக்கையும், பற்றும் கொண்டு வாழ்ந்துள்ளார்கள். தங்கள் முயற்சிகளின் வெற்றிக்கு உதவுவதற்காகவும், தீங்கு நேராமல் இருப்பதற்காகவும் இவ்வுலக மறுமையுலக வாழ்க்கை இனிமை வேண்டும் என்பதற்காகவும் கடவுள்களை வேண்டி வழிபட்டான். கடவுள் வழிபாடு தொடக்க காலத்தில் இயற்கை வழிபாடாகத் தொடங்கி முன்னோர் வழிபாடாக வளர்ந்து இன்று சமயநிலையாக ஏற்றம் பெற்றுள்ளது. சங்ககால மக்கள் வழிபட்டத் தெய்வங்களைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.*

***கருச்சொற்கள்:*** *சங்க இலக்கியம், கடவுள், சங்க காலம், சமயம்.*

## *முன்னுரை*

*சங்க இலக்கியத்தில் கடவுள் என்பது தாய் தெய்வ வழிபாட்டு முறையை அடிப்படியாக கொண்டது. அதே போல் நடுகல் வழிபாடு என்பது குறிப்பிட தக்க ஒன்றாக இருந்தது. மலை, தாவரம், இயற்கை, இல்லுறை தெய்வம் என்ற நிலையில் சங்க இலக்கிய கடவுள் வழிபாடு அமைந்தது. கடவுள் வழிபாட்டில் உருவ வழிபாடு*

பெரிதும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மனித சமூகம் இயற்கையை முழுமையாக நம்பி வாழ்ந்தனர். இதன் அடிப்படையில் கடவுள் வழிபாட்டுக் கொள்கைகளை ஆராய்வது இவ்வாய்வின் நோக்கமாகும்.

## *ஆய்வு அணுகுமுறைகள்*

சங்க இலக்கியத்தில் தமிழர் வாழ்வியலுக்குள் வடமரபின் தாக்கம் இருப்பதால் பகுப்புமுறைத் திறனாய்வும் *(Analytical Method)* கருத்துக்களை விளக்குவதால் "விளக்கமுறைத் திறனாய்வும் *(Descriptive Approach)* பின்பற்றப்படுகின்றன. சமூகவியலும், மெய்யியலும் இவ்விரண்டு அணுகுமுறையும் மேற்கொள்ளப் படுகின்றன.

## *வழிபாடு*

மனிதஇனம் தோன்றிய காலம் முதல் வழிபாடு இருந்து வருகிறது. மனிதனின் உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்று அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்காக எண்ணியபோது வழிபாடு தொடங்குகிறது. இறைவனிடத்தில் அன்பு செய்து போற்றி வழிபடுதலாகிய பக்தி நெறியே மனித வாழ்வின் உயிர்நிலை ஆகும். "உடலை வளர்க்க உணவு தேவைப்படுவது போல உயிரை வளப்படுத்த வழிபாடு தேவைப்படுகிறது" (மா.இராசமாணிக்கனார், (1995) தமிழர் நாகரிகமும் பண்பாடும், வழிபாடு, ப.10) வழிபாடு என்ற சொல்வழியிற் செல்லுகை, பின்பற்றுகை, வணக்கம் எனப் பல பொருள்களைத் தருகிறது.

கடவுட் கொள்கையும் வழிபாட்டு முறைகளும் உருவாக்கப்பட்டன. சங்க இலக்கியத்தில் தமிழர்கள் இயற்கையைத் தான் வழிபட்டார்கள். "இவ்வழிபாட்டில் தீ, மின்னல், இடி, சூரியன் போன்ற இயற்கை சக்திகளை வழிபட்டான். அடுத்து வாழ்வியலுக்கு உறுதுணையாக இருந்த நிலம், நீர், நெருப்பு, மரம், காடு, மலை, மக்கள் (வீரன்), பேய், பூதம், பாம்பு இவைகளில் கடவுள் உறைவதாக நம்பினான். ஆகவே இவைகளை வழிபடத் தொடங்கினான். கடவுளை பிறப்பிக்கிறான். தனக்கு பழக்கப்பட்ட, பயன்பட்ட ஆயுதங்களைக் காட்டிலும் பிறருக்கு அச்சத்தைத் தரக்கூடிய ஆயுதமாக கடவுளுக்கு வடிவமைத்தான். இவ்வழிபாட்ட முறைகள் தங்கள் மூதாதையர்களின் வழிவந்தவையாகவே இருக்கும். அவை தமிழ்ச்சமூக அடையாளமாகவும், தனித்த வழிபாட்டு மரபையும் கடவுட் கொள்கையும் உள்ளடக்கியதாகும். மரங்களின் அடிப்பாகத்தில் கடவுள் இருப்பதாகப் பாடல்கள் பல தெரிவிக்கின்றன. இதில் ஆல், ஓமை, கடம்பு, கள்ளி, பனை, மரம், மருதம், வாகை, வேங்கை, வேம்பு போன்ற மரங்களில் கடவுள் வீற்றிருப்பதாகப் பாடல்கள் பதிவு செய்துள்ளன." (மு.சண்முகம்பிள்ளை,1978 சங்கத் தமிழர் வாழ்வியல், பக்.117-118) போரில் வெற்றியை ஈட்டித்தரும் கொற்றவை, வாகை, மரத்தின் அடியில் உறைவதாகப் பதிற்றுப்பத்து பதிவு செய்துள்ளது.

## *மரங்களைத் தெய்வமாகக் காணுதல்*

தொல்குடி மரபில் மனிதன் இயல்பாக மரங்களை ஆயுதங்களாகக் கருவிகளாகப் பயன்படுத்தினான். பின்னர் அவை தனக்கான அடையாள மரமாகவும் காவல் மரமாகவும் தருவித்துக் கொண்டான். மரம் என்பது குறியீடாகக் காணப்பட்டதை "தெய்வம் சேர்ந்த பராரை வேம்பில்" (சஙக இலக்கியம், 1998, அகம்.309), "தொன்று உறைக் கடவுள் சேர்ந்த பராரை, மன்றப் பெண்ணை வாங்கு மடற்குடம்பைத் (சஙக இலக்கியம், 1998, நற்.303), நெடுவீழ் இட்ட கடவுள் ஆலத்து (சஙக இலக்கியம், 1998, நற்.343) கடவுள் ஆலத்துத் தடவுச் சினைப்பல் பழம் (சஙக இலக்கியம், 1998, புறம்.199) போன்ற மரங்களில் தமிழர்களின் கடவுட் கொள்கைகளும், நம்பிக்கையும் உறைந்து இருப்பதைக் காணமுடிகின்றது.

நீர்நிலைகள் தமிழர் தம் வாழ்வியலில் மிக முக்கியப்பங்கு பெறுகிறது. நீர்நிலையில் கடவுள் உறைவதாக நம்பியதை "பெருங்கடல் பரப்பின அமர்ந்து உறை அணங்கோ," (நற்.155) "சூர்ச்சுனை நுழைஇ நீர்ப்பயம் காணாது" (அகம்.91) "துறைவென் அணங்கும் யாம் உற்ற நோயே?" (சஙக இலக்கியம், 1998, ஐங்.53) என் பகைவன் நீர்நிலையில் மலைகளில் உள்ள சுனைகளிலும் கடவுள் உறைவதாகக் கருதப்பட்டது. நீர்த்துறையில் இருக்கும் கடவுள்கள் கண்ணுக்குப் புலப்படமாட்டார்கள் எனத் தமிழர்களிடையே நம்பிக்கை நிலவுகிறது. நதி, ஆறு, ஆற்றின் இடைப்பகுதி, கடல், கழிமுகம், குளம், சுனைபோன்ற நீர்நிலை பெற்றுள்ள இடங்களில் கடவுள் உறைவதாக நம்பி, தமிழர்கள் வழிபட்டார்கள். மகளிரை வருத்தும் தெய்வங்கள் நீர்த் துறையில் உறைவதாக ஐங்குறு நூற்றுப் பாடல்களில் காணலாம்.

### மலைத் தெய்வம்

இயற்கையில் உருவான மலையை இறைவனாக நம்பினார்கள். மலையில் கடவுள்கள் இருப்பதாக தமிழ் மக்கள் பலியிட்டு வழிபடுவதைச் சங்கப் பாடல்களில் காணலாம். மழை இல்லாத காலத்தில் மலைவாழ் மக்கள் கடவுட் பலி கொடுத்து வழிபடுவதைப் பார்க்கலாம். "அணங்கு" அச்சம் தரக்கூடிய கடவுளாகத் தமிழ்ச் சமுதாய மக்கள் வணங்கி வந்ததிணையும், 'சூர்' வருத்தும் தெய்வங்களாக அடையாளப் பட்டுள்ளதை, "உருமும் சூரும் இரைதேர் அரவமும், பழுவும், பாந்தரும் உளப்படப் பிறவும்" (சங்க இலக்கியம், 1998, குறுந்தொகை, குறிஞ்சி, 258-259), "சூர்நகைந்தனையையாய்நடுங்கல்கண்டே" (சங்க இலக்கியம், 1998, குறு.52) இவ்வடிகள் வழி உணரலாம்.

மலைக்குறவர்கள் தங்கள் வேட்டைத் தொழில் குறைந்து வருவதை உணர்ந்து மலைத் தெய்வத்தை வழிபட்டதாக மழை பெய்தால் தான் மலையில் உறையும் தெய்வத்தின் சினம் தனியும் என நம்பிதம் சுற்றத்தாருடன் சேர்ந்து அம்மலைத் (சங்க இலக்கியம், 1998, நற்றி, பா.165) தெய்வத்துப் பலியிட்டுப் பின் அப்பலி உணவைத் தங்கள் சுற்றத்தோடு உண்டதைக் காணலாம். "அணங்குடை நெடுவரை உச்சியின் இழிதரும்" (சங்க இலக்கியம், 1998,அகம்.22) "அணங்குடை வரைப்பின், பாழி அங்கண்" (சங்க இலக்கியம், 1998,அகம்.372) அணங்கு அச்சம் தரக்கூடிய கடவுளாகவே கருதினார்கள். "மலையாளத்தில் கொண்டாடப்படும் தாய் தெய்வத்திற்கும் காதில் ஒரு கிளி, பாம்பு, குறு முயல், பன்றி, கரடிகள் இருப்பதாகப் பாமர மக்கள் பாடுகின்றனர். கொற்றவைக்கும் துர்க்கைக்கும் கிளியையும், பருந்தையும் சேர்த்துக் கூறுவதைச் சிலப்பதிகாரத்தில், பிற தமிழ் நூல்களிலும் காணலாம். பேய், காளி, பூதம் ஆகிய பரிவாரத் தேவதைகள் திராவிடர் ஆரியர் கற்பனை" எனப் பி.எல். சாமி கூறுகிறார். (பி.எல்.சாமி, தாய்த் தெய்வ வழிபாடு,1988 பக்.93).

"அணங்கொடு நின்றது மாலை, வான்கொள்க எனக் கடவுள் ஓங்குவரை பேண்மார் வேட்டு எழுந்து கிளையொடு மகிழம் குன்றநாடன்" (சங்க இலக்கியம், 1998, நற்.பா.165) என்பதால் மரக்கூட்டங்கள் மண்டிக் கிடக்கும் மலைப்பகுதியில் வாழும் மக்கள் வணங்கும் தெய்வமாகிறது. "கள்ளும் கண்ணியும் கையுறையாக, நிலைகோட்டு வெள்ளை நால் கெளிக்கிடாஅய், நிலைத்துறைக் கடவுட்கு உளப்பட ஓச்சி" (சங்க இலக்கியம், 1998, அகம்.156 : 13-15) மலைக் கடவுளுக்கு கள்ளைப் படைத்துப் போற்றியதைக் காணலாம். "தெய்வம் உறையும் மரத்திற்கும் மக்கள் விழா வெடுப்பர்" (நா.ஆறுமுகம்,1977 கலித்தொகை ஓர் ஆய்வு, பக்.134).

அணங்கு, சூர், சரா மகளிர், வரையர மகளிர், கொல்லிப்பாவை மலைத் தெய்வங்கள், மரவழிபாடு, நீர்த்துறைத் தெய்வங்கள், முரசு உறை தெய்வம், பாவை வழிபாடு, இல்லுறை தெய்வம், இருமைப் பண்புகள், நடுகல் வழிபாடு, முருக வழிபாடு ஆகியன தமிழர்களின் நிலக்கடவுளாகும்.

### இல்லுறை தெய்வம்

வீட்டிலும் வீட்டிற்கு வெளியிலும் இருந்து தமிழன் கடவுள் வைத்து வழிபட்டதை சங்க இலக்கியத்தில் பதிவு செய்துள்ளது. மாலை நேரத்தில் பெண்கள் விளக்கேற்றி நெல்லையும் மலரையும் தூவி, இல்லுறை தெய்வத்தை வழிபட்டதற்கு, இன்றும் இவ்வழிபாட்டுமுறை இருப்பதையே இதற்குச் சான்றாகும். "காழ்புனைந்து இயற்றிய வனப்பு அமைநோன் சுவர்ப், பாவையும், பலி எனப்பெறாஅ" (சங்க இலக்கியம், 1998,அகம்.369) இல்லுறை தெய்வத்துக்கு வெண்சோற்றைக் கருணைக் கிழங்குக் கழியோடு கூட்டிப் பெண்கள் படைத்தனர்; பலியாகப் படைக்கப்பட்ட இச்சோற்றை உண்பதற்காகக் காக்கைகள் தம் குஞ்சுகளோடு கூடுகளில் தங்கியிருந்தன.

"விண்ணுற ஓங்கிய பல் படைப்புரிசை, தொல்வரி நிலைஇய அணங்குடை நெடுநிலை" (சங்க இலக்கியம், 1998, மனை.352-353) செல்வர்கள் வாழும் வீடுகளில் இல்லுறை தெய்வங்கள் இருந்தாக மதுரைக் காஞ்சியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### நடுகல் வழிபாடு

தமிழர் வாழ்வியல் மரபில் போர் இல்லாமல் இல்லை. இப்போரில் வீரமரணம் அடைபவரைப் போற்றும் மரபாகும். பண்டையத் தமிழர் வழிபாட்டு மரபில் போரில் இறந்துபட்ட வீரர்களின் நினைவினைப் போற்றும் வகையில் கல்நட்டு போரில் மாண்ட வீரனின் பெயர்களையும் பெருமைகளையும் பொறித்து வழிபட்டு வந்தார்கள். இவ்வழிபாட்டு மரபு தமிழர்களின் வாழ்வியல் மரபையும், வழிபாட்டு மரபையும்

சமூகப் பின்னணியை இணைத்துக் காணும்போது தான் வழிபாட்டின் முதன்மை புலப்படுகிறது. "காட்சி கால்கோள், நீர்படை நடுகல், சீர்த்தகு பெருமாள் வாழ்த்தல் என்று" (இளம் பூரணார் 1978 தொல். பொருள். 63) எனத் தொல்காப்பியத்தில் நடுகல் வழிபாட்டினை முன் வைக்கிறது. "சங்கச் செய்யுட்களில் காணப்படும் நடுகல் பற்றிய குறிப்புகளில் பல வெட்சித்திணையின் தொடர்புடையனவாகவே உள்ளன. ஆநிரை மீட்டு அம்மயற்சியில் உயிர் துறந்த வீரர்களே பாராட்டப் பட்டுள்ளனர்" என எ.தட்சிணாமூர்த்தி குறிப்பிடுகிறார் (எ.தட்சிணாமூர்த்தி, 1988, தமிழர் நாகரிகமும் பண்பாடும்).

நடுகல் வழிபாட்டில் தமிழ் மக்கள் மிகுந்த ஆர்வமிக்கவர்களாக இருந்தார்கள். இந்த நடுகல் வழிபாட்டில் வீரன் கடவுட் தன்மை அடைந்துவிட்டதாக நம்புவதை உணரமுடிகின்றது. நடுகல்லை கடவுளாகவே எண்ணி வழிபட்டார்கள். "ஊர்நனியிறந்த பார்முதில் பறந்தலை, ஓங்குநிலை வேங்கை ஒன்றிணர் நறுவீப், போந்தையந் தோண்டின் பனைந்தனர் தொடுத்துப், பல்ஆர் கோவலர் படலை சூட்டக், கல்லாயினையே கடுமான் தோன்றல்" (சஙக இலக்கியம், 1998, புறம்.265). ஊருக்குப் புறத்தே நடுகல் அமைத்து வழிபட்டு வந்ததைக் காணமுடிகின்றது. நடுகல் வீரர் நினைவாக வழிபாடு செய்யும்போது வீரன் விரும்பிய மதுவகைகளையும், மலரையும், மயில்தொகை, வேல் போன்றவைகளை வைத்து "பீலிசூட்டிய பிறங்குநிலை நடுகல் வேல் ஊன்று பலகை வேற்றுமுனை கடுக்கும்" (சஙக இலக்கியம், 1998, அகம்.131) என வழிபட்டதை அறியலாம்.

தமிழர்கள் நடுகல்லிற்குப் பலிகொடுத்து வழிபட்டதை, "நடுகல் பீலிசூட்டி, துடிப்படுத்துத், தோப்பிக்கள்ளொடு துருஉப்பலி கொடுக்கும்" (சஙக இலக்கியம், 1998, அகம்.35) என்பதை அகப்பாடல் புலப்படுத்துகின்றன. "செல்லும் தேஎத்துப் பெயர்மருங் அறிமார், கல்லெறிந்து எழுதிய நல்லரை மராஅத்தி, கடவுள் ஓங்கிய காடுரசு கவலை" (சஙக இலக்கியம், 1998, மலைபடு. 394 - 396) என நடுகல்லினை நுமனேநடு கல்லாக வைக்காமல், அக்கல்லை தெய்வம்சம் கொண்டதாக வழிபாடு செய்ததையும், தனித்தப் பண்பாட்டு அடையாளமாக தமிழ் மரபிற்கே உயரியதாகும்.

## வெறியாட்டு முருக வழிபாடு

தமிழ்நாட்டில் முருகவழிபாடு பழங்கற்காலம் தொடங்கியதை "ஆதிச்சக் குடும்ப நல்லூரில் கிடைத்துள்ள புதைகுழித் தாழிகளில் இருந்த முருகனுக்குக் காவடி எடுப்போர் பயன்படுத்தும் வாய்க்கூடுகள் போன்ற தங்கவாய் முடி, கரும் இரும்பாலான திரிசூலங்களும் இருந்தன. இத் திரிசூலங்களில் சேவல் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளது. ஆதிச்சக் குடும்பநல்லூர் புதை குழிகளின் காலம் கல்லும் உலோகமும் கலந்த கருவிகளைப் பயன்படுத்திய பெருங்கற் படைக்கலமாகும்." (தமிழ் லெக்சிகன், ப.3279) தமிழ் வழிபாட்டு மரபில் முருகவழிபாடு பழங்காலம் தொட்டே வழிபட்டு வந்துள்ளமையைக் காணமுடிகின்றது.

தமிழர்களின் வாழ்வியலில் வெறியாட்டு மிகத் தொன்மையானது. "மனிதர்மேல் தெய்வம் ஏறி வருவதுண்டு என்ற நம்பிக்கையில் இருந்தே உருவானதே இது. இன்று கோயில் பூசாரிகள் சாமியாடி வருவதைக் காணலாம். சங்ககாலத்தில் முருகனோடு தொடர்புடையதாக இவ்வெறியாடல் திகழ்ந்தது. முருகனுக்குரிய வேலினைக் கையில் ஏந்தி ஆடியோன் வேலன் எனப்பட்டான்" தமிழர் வாழ்வியலில் வெறியாடல் முருகனுக்குரிய வழிபாட்டை உணர்த்துவதாகும்.

வேலனாக வேடம் புனைந்து முழவு இசை முழங்குவதோடு வேலனின் பெருமைகளையும் புகழினையும் பாடிக்கொண்டே ஆடுவான், இவ்வாடு களத்தில் செந்நெல் சிதறிக் கிடந்ததை, வேலன் புனைந்த வெறிஅயர் களந்தொறும், செந்நெல் வான் பொரி சிதறி அன்ன என வெறியாட்டு நிகழ்வை தமிழர் தம் வாழ்வியலோடு இரண்டறக் கலந்த நிகழ்வாகவே பார்க்க முடிகின்றது. தமிழர் வழிபாட்டு மரபில் உயிர் பலியிட்டு வணங்குவதை வேட்டைச் சமூக மரபில் இருந்து வேட்டுக் கடவுளர்களாகத்தான் முருகன் அடையாளம் காணப்படுகிறான். தமிழ்ச் சமூக வழக்கில் சங்க இலக்கியத்தில் முருகனுக்கு உயிர்ப்பலி கொடுக்கும் வழக்கத்தினை, "மறிக்குரல் அறுத்து, தினைப் பிறப்புஇரீஇ" (சஙக இலக்கியம், 1998, குறுந்.263) என்றும் "மருகு அயர்ந்து வந்து முதுவாய்வேல்! சிறுமறி கொன்று இவள் நறுநுதல் நீவி" (சஙக இலக்கியம், 1998, குறு.362) எனவும் "வெறிஎன உணர்ந்த உள்ளமொடு மறியறுத்து" (சஙக இலக்கியம், 1998, நற்.47) எனப் பண்டைய தமிழ்ச் சமூக மரபில் தனக்கான அடையாளம் இருப்பதை உணரலாம். காலப்போக்கில் இவ்வழிபாட்டு முறையில் நவீனம் புகுந்து இருப்பதைக் காணலாம்.

திருமுருகாற்றுப்படையில் முருகன் கடவுட் தன்மையைவிட மன்னருக்கான அமைப்பே காண்பதற்கு இடமளிக்கிறது. முருகனின் ஊர் தியாக யானையும் அதனைப் 'பிணிமுகம்' எனக் கூறுகிறது. முருகனுடைய கொடி, ஊர்தி, ஆடை, அணிகலன்களையும் இசைக்கப்படும் வாத்தியங்களும் போருக்கான இசையாக இருப்பதை உணரமுடிகின்றது. முருகனுடைய வேல்படைச் சிறப்பித்துப் பேசப்படுகின்றது.

## *சிவ வழிபாடு*

தெய்வ வழிபாடுகளுக்குள் தலைமையான வழிபாடு சிவ வழிபாடு எனக் கருதப்படுகிறது. சிவ வழிபாடு கொற்றவையாகிய வனதுர்க்கை, சினந்து அழிக்கும் காளி, அருள் வழங்கும் மலைமகள் ஆகிய மூன்று சக்திகளோடு நெற்றிக் கண்ணாகிய சிவபெருமானோடு பிரிவின்றிக் கூறப்பட்டுள்ளது.

சங்க இலக்கியத்தில் சிவன் என்ற சொல்லே இல்லை. அதற்குப் பதிலாக ஆநிரையான், ஆலமர் செல்வன். ஆனேற்றுக் கொடியுடையன், ஈசன், மணிமிடற்றன், முக்கட் செல்வன், தாழ்சடைப் பெரியோன் என்ற பெயர்களால் அழைக்கப் பெறுகிறான். வழிபாட்டில் சிவனுக்கென்று தனியே கோயில் அமைத்து வழிபடும் வழக்கமும், ஊருக்கு நடுவே மன்றங்கள் அமைத்து வழிபடும் வழக்கமும் இருந்ததை சங்க இலக்கியங்களில் அறியமுடிகிறது.

உருவ வழிபாடுகளைக் கூறுவதோடு சிவபெருமானுடைய புராணச் செய்திகளும் எட்டுத்தொகை நூல்களில் இடம்பெற்றுள்ளன. வானிடத்தில் பறந்து திரியும் இயல்புடைய பொன், வெள்ளி, இரும்பு மதில்களைக் கொண்ட நகரங்கள் மூன்றில் வாழ்ந்த அரக்கர்களைச் சிவபெருமான் தன் சிரிப்பினால் எரித்தான் என்பது புராண வரலாறு ஆகும். இச்செய்தி பரிபாடலில் இடம்பெற்றுள்ளது. "மூவகை ஆரெயில் ஓர்அழல் அம்பின் முறிய, மாதிரம் அழலஎய்து அமரர் வேள்வில், யாகம் உண்ட பைங்கண் பார்ப்பான்" (சஙக இலக்கியம், 1998, பரி.25-27) அதுபோலக் கலித்தொகையில், "எயில் எய்யப் பிறந்த எரிபோல" (சஙக இலக்கியம், 1998, கலி.150) என்ற செய்தி இடம்பெற்றுள்ளது. சிவபெருமான் கங்கையைச் சடையில் வைத்திருப்பதை, "தணிவுறத் தாங்கிய தனிநிலைச் சலதாரி, மணிமிடற்றண்ணல்" (சஙக இலக்கியம், 1998, பரி.9, 6-7) ஆலமரத்தின் கீழ் அமர்ந்து சிவபெருமான் அறம் உரைத்த செய்தியை, "ஆலமர் செல்வன் அணிசால் பெருவிறல்" (சஙக இலக்கியம், 1998, கலி.81) "ஆலமர் கடவுளன்ன நின் செல்வம்" (சஙக இலக்கியம், 1998, புற.198). சிறுபாணாற்றுப் பாடல், "ஆலமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த... ஆர்வ நன்மொழி" (சஙக இலக்கியம், 1998, சிறு.97-99) என்று ஆலமர் செல்வர் நிலை குறிக்கப்பெற்றுள்ளது.

மதுரைக் காஞ்சியில் சிவபெருமானுக்கு எடுக்கப்பெற்ற வேள்வி பற்றிய செய்தி, "நல்வேள்வித் துறைபோகிய" (சஙக இலக்கியம், 1998, ம.காஞ்சி, 760) என்றும், பாண்டிய நாட்டில் ஏழு நாட்கள் சிவபெருமானுக்கு விழா எடுக்கப் பெற்ற செய்தி, "கழுநீர் கொண்ட எழுநாள் அந்தி ஆடுவதுன்று விழவின் நாடார்த்தன்றே" (ம.காஞ்சி, 427-428) என்றும் குறிக்கப் பெறுகின்றன. அதுபோலப் பெரும்பாணாற்றுப்படை மற்றும் பட்டினப் பாலையில் "அவிர்சடை முனிவர் சிவபெருமானுக்குரிய வேள்வியை நடத்தினர் என்ற செய்தி இடம்பெற்றுள்ளது. சிவனை வழிபடுபவர்கள் துவராடை உடுத்தி முக்கோலினைக் கொண்டிருந்தனர் என்பதை முல்லைப் பாட்டு, கற்நோய்த் துடுத்த படிவப் பார்ப்பான், முக்கோல் அசைநிலை கடுப்ப," (சஙக இலக்கியம், 1998, மு.பாட்டு, 36-37) என்று குறிப்பிடுகின்றது. இவ்வாறு சிவவழிபாட்டின் தொன்மையைப் பத்துப் பாட்டில் இடம்பெற்ற பாடல்களும் வரையறுத்துக் காட்டுகின்றன என்பதை அறியமுடிகிறது.

## *திருமால் வழிபாடு*

தமிழ் மக்களின் பண்டைய சமயங்களுள் ஒன்று திருமாலைப் பரம்பொருளாகக் கொண்டு வழிபட்டு வந்த முறையாகும். தமிழகத்தில் திருமால் வழிபாடு தோன்றி நிலைபெற்றது என்பதற்குத் தொல்காப்பியம் சங்கஇலக்கியங்கள் போன்ற தமிழ் நூல்களே சான்றாக நிற்கின்றன. கருப்பொருளில் தெய்வத்தை ஒன்றாக எண்ணும் மரபைத் தொல்காப்பியம் உணர்த்துகிறது. "மரயோன் மேய காடுறை உலகமும்"[12] அகத்திணையிலுள்ள திருமால் வழிபாட்டைக் குறிப்பிடும். சங்க இலக்கியங்களில் திருமால் முல்லைநிலத் தெய்வமாகப் போற்றப் படுகின்றார்.

அயன் கரியன், நீலநிறத்தான், கையில் சங்கு சக்கரம், மார்பில் திருமகள், மறுதித்துழகாய் மாலை, உடம்பில் பீதாம்பர உடை, கருடக்கொடி உடையவன், ஆலிலையில் கிடந்தவன் என்றெல்லாம் அவன் பெருமைக்குரிய அடையாளங்கள் முன்வைக்கப் படுகின்றன.

*பதிற்றுப் பத்தின் நான்காம் பத்து முதல் பாடல் பண்டைச் சேரநாட்டில் உள்ள திருமால் கோவிலில் மக்கள் திரளாகச் சென்று வழிபட்டு வரம்பெற்று மீண்டக் காட்சியினை விளக்கமாகக் கூறுகின்றது. மேலும் ஏழாம் பத்தின் பாட்டுடைத் தலைவனாகிய செல்வக் கடுங்கோ வாழியாதலின் பண்புகளைக் கூறும்பொழுது அவன் கொண்டிருந்த திருமால் ஈடுபாட்டினையும் அதன் பயனாக கோயில் வழிபாடு தடையின்றி நிக "ஏகந்தூர்' என்றும் ஊரினை நிவந்தமாக அளித்ததையும், "மாயவண்ணனை மன்னுறல் பெற்றவற்கு, ஏத்திர நெய்யிலலுகந்தூ சந்துப்" (சஙக இலக்கியம், 1998, பத்து.7:8:9) எனக் குறிப்பிடப்படுகிறது. இதன் – மூலம் சேரநாட்டு மன்னர்களும், மக்களும் திருமால் வழிபாட்டில் ஈடுபாடு கொண்டிருந்ததை உணரமுடிகிறது.*

*திருமாலை முல்லை நிலத்தில் வாழும் இடையர்கள் தம் ஊரின் மன்றத்தில் கைகோத்துக் குரவை கூத்து நிகழ்ச்சி வழிபாடு செய்ததைக் கலித்தொகை ஆவணப்படுத்தியுள்ளது. திருமால் பாம்பனையில் துயிலும் காட்சியை பெரும்பாணாற்றுப்படையில், "காந்தளம் சிலம்பின் களிறு படிந்தாங்கு, பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன்" (சஙக இலக்கியம், 1998, பெரும்.392-373) எனத் திருமாலின் பள்ளி கொண்ட நிலையைக் "கிடந்த கோலத்தை" காணமுடிகிறது. பரிபாடலில் "கண்ணன் அவதாரக் கதைகளே பண்டைக் காலத் தமிழ் மக்களுக்கு நன்கு அறிமுகமாகி இருப்பதாகத் தெரிகின்றது.*

## *இந்திர வழிபாடு*

*தொல்காப்பியம் நானியத் தெய்வங்களில் ஒன்றாகிய வேந்தனாகிய இந்திரனை "வேந்தன் மேயதீம்புனல் உலகமும்" எனக் குறிப்பிடுகிறது. மருதநிலக் கடவுளாகிய இந்திரனைப் பற்றிச் சில இடங்களில் மட்டுமே குறிப்புகள் உள்ளன. "வேந்தன் என்னும் மருதநிலத் தமிழ் தெய்வமே இந்திரன்" என்னும் வடநாட்டுத் தெய்வமாகப் பெயர் மாறிற்று என ஞா.தேவநேயன் குறிப்பிடுகிறார்.*

## *முடிவுரை*

*மனிதஇனம் தோன்றிய காலம் முதலே வழிபாடும் இருந்து வருகிறது. வழிபாடு என்பது மனத்துடன் தொடர்புடையது. வாழ்க்கையில் கவலைகளும், சிக்கல்களும் அதிகப்படும்போது வழிபாடுகளும் மிகுந்துள்ளன. சங்ககால மக்கள் கடவுள் நம்பிக்கையும், கடவுள் பற்றும் கொண்டு வாழ்ந்துள்ளனர்.*

*கடவுள் வழிபாடானது இயற்கை வழிபாடாகத் தொடங்கி இன்று சமயநிலையாக மாற்றம் பெற்றுள்ளது. சங்க இலக்கியங்களில் சிவன், முருகன், இந்திரன், திருமால், காளி ஆகிய தெய்வங்களைப் பற்றிய குறிப்பும் வழிபாடும் இருக்க வாய்ப்பு உள்ளது.*

*தமிழர்கள் இனக்குழு மக்களைப் போன்றே அச்சம் தரும் தெய்வங்களை வணங்கினார்கள். தெய்வங்களுக்குப் பலியிட்டு அவர்களை அமைதிப்படுத்தினால் அத்தெய்வங்கள் தங்களுக்கு நன்மைகள் செய்யும் என்று நம்பினார்கள். சங்ககால மக்கள் நடுகற்களைக் கடவுளாக வணங்கி வந்தார்கள். தமிழரின் மரபுசார்ந்த வழிபாட்டு முறை நடுகல் வழிபாடு இன்றுவரை இருந்து வருகிறது. இன்றளவும் நீர்கள், மரங்கள், குளங்கள், மலைகள், கொற்றவை, பாம்பு, இடி, மின்னல், தீ இவைகளை வணக்கத்திற்கு உரியவைகளாகவே தமிழர்கள் காணுகிறார்கள் என்பது யதார்த்தமாக உண்மையாகும்.*

*அணங்கு, சூர், சரா மகளிர், வரையர மகளிர், கொல்லிப்பாவை மலைத் தெய்வங்கள், மர வழிபாடு, நீர்த்துறைத் தெய்வங்கள், முரசு உறை தெய்வம், பாவை வழிபாடு, இல்லுறை தெய்வம், இருமைப் பண்புகள், நடுகல் வழிபாடு, முருக வழிபாடு ஆகியனவாகும். வைதீக சமயத்தாக்கம் இலக்கியத்தில் சிவன், திருமால், திருமகள், இந்திரன், தேவவேள்விகளின் சமயம் சார்ந்த புராணக் கதைகளும், அவதாரக் கதைத் தமிழர் கடவுள் கொள்கையில் இணைத்துக் கொண்டு வடசமயக் கொள்கை தன் இருப்பையே முதன்மையாகக் கொண்டு ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிவிட்டன எனக் கருத இடமுண்டு.*

## *REFERENCES*

Dhachanamoorhy, A., (2011). *Thamizar Nagarikamum panbaadum*, Yal pathippagam, Chennai.

Madhaiyan, Pe., (2004). *Sangakaala inakkulu samuthayamum arasu uruvakkamum*, Pavai Pathippagam, Chennai.

Nadarasan, Thi. Su., (2019). *Thamizar panpaattu veligal*, NCPH, Chennai.

Raasamaanickanaar, Maa, (1995.) *Thamizhar Nagarigamum Panpaadum*, Paari Nilaiyam, Chennai - 01.

Saaminathaiyar, V., (1974). *Paththuppaattu Moolamum*, Uraiyaasiriyar Bhaaraththuvaasi

Nachchinaarkkiniyar Uraiyum, U.V. Saaminathaiyar Nuul Nilaiyam, Thiruvaanmaiyur, Chennai – 41.

*Sanga Ilakkiyam (Paththuppaattu, Ettuththogai)*, (1998). New Century Book House (P) Ltd, 41- B, SIDCO Industrial Estate, Ambattur, Chennai - 98.

Selvarasu, Na., (1988). *Sanga ilakkiyamum samuga vaalviyalum*, Manivasakar pathippagam, Chennai.

Saamy, P.L., (1978). Thaai Theiva Vazhipaadu, First Edition., Chennai -90.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License